தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூபாய் 5.90 கோடி மதிப்பீட்டில் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கான பணிகளை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் துவக்கி வைத்தார்.உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார்,தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் காவேரி சீனித்துரை, ஒன்றிய செயலாளர் சீனித்துரை உள்பட பலர் உள்ளனர்.

4864 பயனாளிகளுக்கு ரூ.74.79 கோடி மதிப்பில்

தென்காசி மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் 22 கட்டிடங்களுக்கு அடிக்கல்!

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் சிறப்புரை!

தென்காசி. பிப்.18 -

தென்காசி மாவட்டம் தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பல்வேறு துறைகளின் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று 4864 பயனாளிகளுக்கு ரூபாய் 40.85 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,ரூபாய் 23.94 கோடி மதிப்பிலான 22 கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டியும் சிறப்புரையாற்றினார்.

தென்காசி மாவட்டம் தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று முன்தினம் (16.02.2025) பல்வேறு துறைகளின் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் கூடுதல் கட்டிடங்கள்,பொது சுகாதார அலகு,அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அடிக்கல் நாட்டு விழா வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார்,தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலைக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் வரவேற்புரை யாற்றினார்.

பின்னர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மக்களின் நலனில் அக்கறை கொண்டு பல எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலம் 01 பயனாளிக்கு ரூ.1 லட்சம் மதிப்பிலான விபத்து நிவாரண உதவித்தொகையும்,25 பயனாளிகளுக்கு ரூ.2.34 லட்சம் மதிப்பிலான திருமண உதவித் தொகையும்,36 பயனாளிகளுக்கு ரூ.1.02 லட்சம் மதிப்பிலான கல்வி உதவித் தொகையும்,57 பயனாளிகளுக்கு ரூ.12.17 லட்சம் மதிப்பிலான இயற்கை மரண உதவித்தொகையும்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் 4671 பயனாளிகளுக்கு ரூ.40.49 கோடி மதிப்பிலான வங்கி பெருங்கடன் உதவிகளும்,15 பயனாளிகளுக்கு ரூ.7,25 லட்சம் மதிப்பிலான மணிமேகலைவிருதிற்கான தொகையும்,

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 05 பயனாளிகளுக்கு ரூ.5.50 லட்சம் மதிப்பிலான இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும், வேளாண் பொறியியல் துறையின் மூலம் 02 பயனாளிகளுக்கு ரூ89 ஆயிரம் மதிப்பிலான களை எடுக்கும் கருவிகளும்,02 பயனாளிகளுக்கு ரூ.2.33 லட்சம் மதிப்பிலான பவர் டில்லர்களும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலம் 13 ஆதரவற்ற குழந்தைகளுக்கு ரூ.1,30 லட்சம் மதிப்பிலான உதவித்தொகையும், கைவிடப்பட்ட 18 குழந்தைகளுக்கு ரூ.1.80 லட்சம் மதிப்பிலான உதவித்தொகையும், மாற்றுத்திறனாளி பெற்றோரின் 01 குழந்தைக்கு ரூ.10 ஆயிரம் மதிப்பிலான உதவித்தொகையும், ஒற்றை பெற்றோர் உள்ள 18 குழந்தைகளுக்கு ரூ.90 ஆயிரம் மதிப்பிலான உதவித் தொகையும் என மொத்தம் 4864 பயனாளி களுக்கு ரூ.40.85 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டத்தில் பொதுப்பணித்துறையின் மூலம் பூலாங்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.1.60 கோடி மதிப்பில் 6 கூடுதல் வகுப்பறைகளும், ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறை கட்டிடங்களும், நெட்டூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.21.16 லட்சம் மதிப்பில் 8 கூடுதல் வகுப்பறைகளும், ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறைகளும், பாவூர்சத்திரம் அவ்வையார் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.1.41 கோடி மதிப்பில் 6 கூடுதல் வகுப்பறை களும், மாறாந்தை அரசு மேல்நிலை பள்ளியில் ரூ.1.88 கோடி மதிப்பில் 8 கூடுதல் வகுப்பறைகளும், ஊத்துமலை அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.94.24 லட்சம் மதிப்பில் 4 கூடுதல் வகுப்பறைகளும், பலபத்திரராமபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் ரூ.94.24 லட்சம் மதிப்பில் 4 கூடுதல் வகுப்பறைகளும், தழைசுப்பிரமணிய புரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் ரூ.2.11 கோடி மதிப்பில் 8 கூடுதல் வகுப்பறைகளும், ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறை கட்டிடங்களும் கூடலூர் அரசு உயர்நிலைப் பள்ளி யில் ரூ.94.24 லட்சம் மதிப்பில் 4 கூடுதல் வகுப்பறைகளும், வென்றிலிங்கபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் ரூ.70.68 லட்சம் மதிப்பில் 3 கூடுதல் வகுப்பறை கட்டிடங்களும், கரிவலம்வந்தநல்லூர் ஏ.எம்.சி. அரசு உயர்நிலைப் பள்ளியில் ரூ.84.59 லட்சம் மதிப்பில் ஆய்வக கட்டிடமும், குடிநீர் வசதி மற்றும் ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறை கட்டிடங்களும், வடகரை அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.94.24 லட்சம் மதிப்பில் 4 கூடுதல் வகுப்பறை கட்டிடங்களும், சாம்பவர்வடகரை அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.1.41 கோடிமதிப்பில் 6 கூடுதல் வகுப்பறை கட்டிடங்களும், சேர்ந்தமரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.94.24 லட்சம் மதிப்பில் 4 கூடுதல் வகுப்பறை கட்டிடங்களும்,

முள்ளிகுளம் பி.கே. அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.94.24 லட்சம் மதிப்பில் 4 கூடுதல் வகுப்பறை கட்டிடங்களும், அச்சன்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.1.88 கோடி மதிப்பில் 8 கூடுதல் வகுப்பறை கட்டிடங்களும், சுகாதாரத்துறை யின் மூலம் 2024 2025 ஆண்டிற்கான நிதி குழு மானியத்திட்டத்தின் கீழ் பாவூர்சத்திரம் வட்டாரம் சிவகுரு நாதபுரத்தில் ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையத் தினையும், வாசுதேவநல்லூர் வட்டம் தேவிபட்டினத்தில் ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையத்தினையும், வாசுதேவநல்லூர் வட்டம் இராயகிரியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தினையும்,

குருவிகுளத் தில் ரூ.50. லட்சம் மதிப்பீட்டில் குருவிகுளம் வட்டார பொது சுகாதார அலகு, அரசு ஆரம்ப சுகாதார நிலையத் தினையும், ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் காரிச்சாத்தான் துணை சுகாதார நிலையத்தினையும், இலத்தூரில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் பொது சுகாதார அலகு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினையும், குருவிகுளம் வட்டம் அய்யனேரியில் ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையத்தினையும் என மொத்தம் ரூ.23.94 கோடி மதிப்பிலான 22 கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது.

நம் முதலமைச்சர் அவர்கள் உங்களைப் பற்றியும்,தமிழ்நாட்டைப் பற்றியும் அன்றாடம் சிந்தித்து, சிந்தித்து சிறப்பான திட்டங்களை வழங்கியும், அதனை நடைமுறைப் படுத்தியும் திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வருகிறார்கள்.இந்த 4 ஆண்டுகளில் 10 லட்சம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.இன்னும் 6 லட்சம் பட்டாக்கள் வழங்க உத்தரவு போடப்பட்டுள்ளது.வருகிற ஓராண்டுக்குள் இருக்கின்ற பணிகளை எல்லாம் முடிப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். மக்கள் பணிகளை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று கூறி யுள்ளார்கள். இப்படி இரவு, பகல் பாராது உழைத்து வரும் நம் முதலமைச்சர் அவர்களின் திராவிட ஆட்சிக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பேசினார்.

நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், ஊராட்சி வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ,தென்காசி நகர் மன்ற தலைவர் ர.சாதிர், மாவட்ட துணை செயலாளர்கள் கனிமொழி, கென்னடி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா. செல்லத்துரை, முத்துப்பாண்டி, சேக்தாவூது, ஆறுமுகச்சாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் சாமித்துரை, ரகீம், இராஜேஸ்வரன், தமிழ்செல்வி, ஒன்றிய செயலாளர்கள் அழகுசுந்தரம், திவான்ஒலி, லாலா சங்கரபாண்டியன், ஜெயக்குமார், சுரேஷ், நகர செயலாளர்கள் வெங்கடேசன், அப்பாஸ்,கணேசன், பேரூர் செயலாளர்கள் சுடலை, குட்டி, முத்தையா, பண்டாரம், கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான், தென்காசி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா,அரசு கூடுதல் வழக்கறிஞர் வேலுச்சாமி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் ரமேஷ், முருகன், அழகு தமிழ் சங்கர், வீராணம் சேக்முகமது,மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் ஐவேந்திரன் தினேஷ், சண்முகநாதன்,ஜீவானந்தம்,கரிசல் வேலுச்சாமி, முத்து சுப்பிரமணியன், முகமது அப்துல் ரஹீம், கருப்பண்ணன், சுரேஷ் உட்பட கழகத்தினர் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் தென்காசி வருவாய் கோட்டாட்சியர் லாவண்யா நன்றியுரையாற்றினார்.

நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., நெல்லை மத்திய மாவட்ட முன்னாள் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கானை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.எல். எஸ்.லெட்சுமணன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜ், பரமசிவ ஐயப்பன் மற்றும் வெங்கடேசன், நவநீதன்,செல்வம், சங்கர லிங்கம் உட்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

தலைவர் மு க ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் ஆகியோர் சிவகங்கை மாவட்டம், கீழடி, பிரான்மலை மற்றும் கானாடுகாத்தான் ஆகிய பகுதிகளில் சுற்றுலாத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து, நேரில் ஆய்வு செய்தனர். இந்நிகழ்ச்சிகளில், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி, திருமதி கா.வானதி, குணேஸ்வரன், டேவிட் பிரபாகரன், விஜயகுமார், கேசவதாசன்,பாலசுப்பிரமணியன் மற்றும் சேங்கைமாறன், பூமிநாதன், அம்பல முத்து, ,சோமசுந்தரம், கதிர்வேல், சிவக் குமார், இந்தியன் செந்தில், சிவபுரி சேகர், புகழேந்தி, ஞானசேகரன், செல்வகுமார், பூமிநாதன், செந்தில் குமார், குடோன்மணி, மாடன் சையது, பரிந்து சரவணன், அலாவுதீன், மனோகரன், அருண் பிரசாத், பார்த்திபன், நிர்மலா, ரமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சுற்றுலாத்துறை சார்பில் - சிவகங்கை மாவட்டம்

பிரான்மலை - கீழடி - கானாடுகாத்தான் பகுதிகளில் வளர்ச்சி திட்டப் பணிகள்!

அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் - ஆர்.ராஜேந்திரன் ஆய்வு!

சிங்கம்புணரி, பிப், 18 -

சிவகங்கை மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதிகள் அதிகமாக உள்ளன. பல நூறு ஆண்டுகள் ஆண்ட பாண்டிய மன்னர்கள் வரலாற்றுகள் உள்ள பகுதிகள் சிவகங்கை மாவட்டத்தின் பகுதிகள் குறிப்பாக கடையேழு வள்ளல்களில் ஒருவரான பாரி ஆண்ட பரம்புமலை என்று அழைக்கப்படும் பிரான்மலை பகுதியிலும், அரிய பொக்கிஷங்களை கண்டெடுத்த கீழடி பகுதிகளும், மன்னர்கள் காலத்தில் சிற்பக் கலைகளை சிற்பக் கலையாக வடிக்கப்பட்ட வரலாற்று சின்னமான வீடுகள் உள்ள கானாடுகாத்தான் உள்ளிட்ட பகுதிகளில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் ஆகியோர் சுற்றுலாத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷா அஜித் தலைமையில் நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வுக்கு வந்த அமைச்சர்களையும் மாவட்ட ஆட்சியரையும் மாவட்ட துணை செயலாளரும் திருப்புவனம் பேரூராட்சி தலைவர் ஆன சேங்கைமாறன், சிங்கம்பு ணரி வடக்கு ஒன்றிய செயலாளர் பூமிநாதன், ஒன்றியப் பொருளாளர் ஆ.பாஸ்கரன் பொதுக்குழு உறுப்பினர்கள் அம்பல முத்து, சோமசுந்தரம், சிங்கம்புணரி நகர செயலாளர் கதிர் வேல் நகர அவை தலைவர் சிவக்குமார், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இந்திய செந்தில்,ஒன்றிய துணைச் செயலாளர் சிவபுரி சேகர், மாவட்ட அயலக அணியின் துணை அமைப்பாளர் புகழேந்தி, மாவட்ட பிரதிநிதிகள் ஞானசேகரன், செல்வகுமார், பூமிநாதன், பிரான்மலை மல்லிகா மெடிக்கல் செந்தில்குமார், பிரதிநிதி குடோன்மணி தொழில்நுட்ப அணி மாடன் சையது, விவசாய அணி பரிந்து சரவணன், நகர துணை செயலாளர் அலாவுதீன், ஒன்றிய இளைஞரணி மனோகரன், நகர இளைஞரணி அருண் பிரசாத்,தொழில் நுட்ப அணி பார்த்திபன், மற்றும் மகளிர் அணி நிர்மலா ,ரமணி.சிங்கம்புணரி ஒன்றிய நகர தி.மு.க. நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இந்த ஆய்வுகளின் போது, அமைச்சர் பெருமக்கள் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், தமிழகத்தின் அனைத்து துறைகளும் சிறந்து விளங்கி வருகிறது. பொதுமக்களுக்கு பயனுள்ள வகையிலான திட்டங்களை செயல்படுத்துவது மட்டுமன்றி, வரலாற்று சின்னங்கள் மற்றும் சிறப்புக்களை எதிர்கால சந்ததியினர்கள் அறிந்து கொண்டு, பயன்படும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

தமிழகத்தில், சுற்றுலாத் துறையினை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டு, "தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை" தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டு, தமிழ்நாட்டில் சுற்றுலாவிற்கு ஒரு புதிய பரிணாமத்தை அளித்து, நாட்டின் முன்னோடி சுற்றுலாத் தலமாக மாற்றி, துறையினை புதிய உயரத்திற்கு கொண்டு செல்வதற்கு அடிப்படையாக அமையும் வகையில், சுற்றுலாக் கொள்கை அமைந்துள்ளது.

இந்தியாவில் சிறப்பான சுற்றுலாத் தலங்கள் அதிக முள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முக்கிய இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் பல்வகையான சுற்றுலாத் தலங்கள், பிரம்மாண்டமான திருக்கோவில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலை மற்றும் வனப்பகுதிகள், அழகிய கடற்கரைகள், மேலும் தனிச் சிறப்பான செட்டிநாட்டு பாரம்பரிய வீடுகள் போன்ற பல்வேறு சுற்றுலாத் தலங்கள் பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வகையில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த 10 சுற்றுலாத் தலங்களை தேர்ந்தெடுத்து, அந்த சுற்றுலாத் தலங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் அதற்கான பணிகளும் தமிழக முழுவதும் நடைபெற்று வருகின்றன.

அதனடிப்படையில், இன்றையதினம் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுலா துறையின் சார்பில் கீழடி, பிரான்மலை மற்றும் கானாடுகாத்தான் பகுதிகளில் சுற்றுலா மேம்பாடு பணிகள் தொடர்பான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதில், வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவகங்கை மாவட்டத்தில் நமது சங்ககால தமிழர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்கள் நகர நாகரிகத்துடன் வாழ்ந்தமைக்கான சான்றாக, அவர்கள் பயன்படுத்திய பொருட்களை உலகத்தமிழர்கள் பார்த்து, அறிந்து கொண்டு வியக்கின்ற வகையில், கீழடி பகுதியில் அகழாய்வுப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மேலும், மத்திய சுற்றுலாத் துறையினரால் தேசிய அளவில் கீழடியை 2024க்கான சிறந்த பாரம்பரிய சுற்றுலா கிராமமாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், சுற்றுலா மேம்பாட்டு திட்டப் பணிகளுக்கென, தற்போது கீழடி கிராமத்தில் ரூ.34.97 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீட்டு பெறப்பட்டு, 2025 2026 நிதியாண்டிற்கான சுற்றுலாத்துறையின் சட்டமன்ற அறிவிப்பிற்கென நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில், கீழடி அருங்காட்சியகத்திற்கு அருகில் அமைந்துள்ள கொந்தகை கண்மாயில் படகு சவாரி மற்றும் கலாச்சார மையம் ஏற்படுத்துவதற்கு, சுற்றுலா வல்லுநர் குழு மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு,வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுதவிர, கீழடி ஊராட்சி பகுதிகளில் புதிதாகவும் 05 வளர்ச்சி திட்டப் பணிகள் மொத்தம் ரூ.34.97 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேபோன்று, சிங்கம்புணரி அருகே பிரான்மலை பகுதியில் அமைந்துள்ள 2500 அடிக்கு மேல் உயரத்திலுள்ள கோட்டை மலையானது, "முல்லைக்கு தேர் கொடுத்த பாரி ஆண்ட பறம்பு மலை" எனப் போற்றப்படுகிறது.

ஆன்மீகத் தலமாக மட்டுமல்லாமல் இயற்கை வளங்கள் மற்றும் வரலாற்றுச் சின்னங்களும் இம்மலையில் நிறைந்துள்ளன. பிரான்மலை உச்சியில் ஒளியுல்லா ஷேக் அப்துல்லா தர்ஹா மற்றும் மங்கைபாகர் கோவிலுக்கு மாதந்தோறும் சுமார் 6,000 சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர்.

பிரான்மலையை மேம்படுத்திட 20242025 அறிவிப்புகளில் ரூ.58.61 இலட்சம் மதிப்பீட்டில் அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், பிரான்மலையில் அமைந்துள்ள வேளர்குளத்தை சுற்றுலாப் பயணிகளுக்கு பயன்படும் வகையில், மேம்படுத்த சுற்றுலா வல்லுநர் குழு மூலம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பகுதியில், பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மேம்படுத்துவதற்கென, 2024-2025 அறிவிப்புகளின் படி, 04 வளர்ச்சி திட்டப்பணிகள் மொத்தம் ரூ.58,61,000 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேபோன்று, கானாடுகாத்தான், செட்டிநாட்டில் சர்வதேச கட்டடக்கலைக்கு இணையாக பல பங்களாக்கள், 250 ஆண்டுகளை கடந்தும் புதுப்பொலிவுடன் கம்பீரமாக காட்சியளிக்கின்றன. காரைக்குடி, பள்ளத்தூர், ஆத்தங்குடி, கொத்தமங்கலம் பகுதிகளில் காணப்படும் செட்டிநாடு வீடுகள் மிகுந்த வேலைப்பாடு, இறக்குமதி செய்யப்பட்ட உயர் வகை மரங்கள் மற்றும் கண்ணாடி வேலைப்பாடுகளுக்கு பிரசித்தி பெற்றவையாகும். குறிப்பாக, கானாடுகாத்தான் செட்டிநாடு வீடுகள் மற்றும் ஆத்தங்குடி பேலஸ் மற்றும் டைல்ஸ் போன்றவற்றை சுற்றுலா பயணிகள் பார்வையிட்டு செல்கின்றனர்.

மேலும், கானாடுகாத்தான் பகுதியில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வதற்கென 2025 2026 நிதியாண்டிற்கான விரிவான திட்ட அறிக்கையும் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் 12 வளர்ச்சி திட்டப் பணிகள் என மொத்தம் ரூ.798.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில், சுற்றுலா துறையின் சார்பில் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையிலும், பிற மாநிலங்கள் வியக்கின்ற வகையிலும் இது போன்று பல்வேறு சுற்றுலா மேம்பாட்டு பணிகள், தமிழகம் முழுவதும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது அமைச்சர் பெருமக்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சிகளில், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கா.வானதி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மண்டல மேலாளர் குணேஸ்வரன், உதவி முதன்மை மேலாளர் டேவிட் பிரபாகரன், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கேசவதாசன் மற்றும் சிங்கம்புணரி வட்டாட்சியர் சிங்கம்புணரி வட்டார வளர்ச்சி அலுவலர் பாலசுப்பிரமணியன், கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலர் (தனி அலுவலர்) ராஜசேகரன்மற்றும் அரசு துறை அதிகாரிகள் பிரான்மலை தி.மு.க. கிளை செயலாளர்கள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர பகுதிக் கழக மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகர்கோவில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார். நாகர்கோவில் மாநகர பகுதி கழகங்களில் மற்றும் வட்டக் கழகங்களில் மேற்கொண்டு வரும் கட்சி வளர்ச்சி பணிகள், கழக நிகழ்ச்சிகள் குறித்து கேட்டறிந்து, கழக வளர்ச்சிக்கான பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினார். கூட்டத்தில் நாகர்கோவில் மாநகர பகுதிக் கழக செயலாளர்கள் இ.ஜவகர், த.ஜீவா, மு.சேக்மீரான் உட்பட வட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.